# முதல் திருப்புதல் தேர்வு - 2023

## பொதுத்தமிழ்

**12-ம் வகுப்பு** மதிப்பெண்கள் : 90

நேரம் : 3.00 மணி

### பகுதி – 1

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 14x1=14

1. "வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே" – எனப் புகழ்ந்து பாடியவர் அ) பாரதியார் ஆ) சுரதா இ) பாரதிதாசன் ஈ) உ.வே.சா
2. சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர்
   அ) சுரதா ஆ) உ.வே.சா இ) வ.சு.ப மாணிக்கம் ஈ) பரிதிமாற் கலைஞர்
3. சுரதா நடத்திய கவிதை இதழ் அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலர் ஈ) விண்மீன்
4. 'சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்' என்று கூறியவர்
   அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) சீத்தலைச் சாத்தனார் ஈ) சேரன் செங்குட்டுவன்
5. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக
   அ) தனித்தமிழ் தந்தை 1. மு.வரதராசனார்
   ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் 2. மயிலை சீனிவேங்கடசாமி
   இ) தமிழ்த்தென்றல் 3. திரு.வி.க
   ஈ) மொழி ஞாயிறு 4. தேவநேயப்பாவாணர்.
6. 'செந்தமிழ்' – இலக்கணக் குறிப்பு தருக. அ) உருவகம் ஆ) பண்புத்தொகை இ) பெயரெச்சம் ஈ) வினைத்தொகை
7. சாகித்திய அகாதமி விருது பெற்ற நூல் அ) வெக்கை ஆ) அஞ்ஞாடி இ) கொம்மை ஈ) பிறகு
8. பொருத்துக.
   அ) கோடைமழை 1. உத்தமசோழன்
   ஆ) முதல்கல் 2. பூமணி
   இ) உரிமைத்தாகம் 3. சாந்தாதத்
   ஈ) தலைக்குளம் 4. தோப்பில் முகமது மீரான் அ) 3,4,1,2 ஆ) 4,2,3 இ) 3,1,2,4 ஈ) 3,2,1,4
9. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே அஃறிணை என்மனார் அவரல பிறவே" இந்நூற்பா இடம் பெற்ற இலக்கண நூல்
   அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்
10. 'நரம்புகளுக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது' என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது?
    அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்
11. 'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்' இத்தொடர் உணர்த்தும் பண்பு
    அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு இ) முரண்பண்பு ஈ) இவை அனைத்தும்
12. 'யானை புக்க புலம்போல்' – இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்
    அ) தனக்குப் பயன்படும் – பிறருக்குப் பயன்படாது
    ஆ) தனக்கும் பயன்படாது – பிறருக்கும் பயன்படாது.
    இ) பிறருக்குப் பயன்படும் – தனக்குப் பயன்டாது
    ஈ) தனக்கும் பயன்படும் – பிறருக்கும் பயன்படும்.
13. சங்க இலக்கியத்தில் அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள் அ) உவமை ஆ) உவமேயம் இ) உத்தி ஈ) உள்ளுறை உவமம்
14. "மீண்டு மந்தப் பழமை நலம் புதுக்கு தற்கு"கவிஞர் குறிப்பிடும் பழமை நலம்
    க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது உ) பொதிகையில் தோன்றியது ங) வள்ளில்களைத் தந்தது.
    அ) க மட்டும் சரி ஆ) க.உ இரண்டும் சரி இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி

### பகுதி–II

#### பிரிவு-I

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3x2=6

15. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' விளக்கம் தருக.
16. கலி விழா, ஒலி விழா– விளக்கம் தருக
17. முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.
18. 'கள்ளுண்டு மயங்கியவனிடம் நல்லன சொல்வது' பற்றி வள்ளுவர் கூறுவன யாவை?

#### பிரிவு–2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2x2=4

19. 'கலை முழுமை' என்றால் என்ன?
20. சங்க காலத்தில் தாய் வழிச் சமூக முறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?
21. வெ. இறையன்பு எழுதிய நூல்கள் இரண்டினை எழுதுக.

#### பிரிவு–3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி.** 7x2=14

22. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
    அ) புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூனு நாளா சிரமப்படுது
    ஆ) ஏவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்

23. பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்க :- கான்– கான்
24. கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக :- குழந்தை, நட, தளிர்நடை, விழு
25. தொடரில் உள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
அ) முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான் ஆ) பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்
26. உவமைத் தொடர்களை சொற்றொடரில் அமைத்திடுக
அ) கிணற்றுத் தவளை போல ஆ) உள்ளங்கை நெல்லிக்கனிபோல்
27. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக்கொள்ள வேண்டும்.
தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.
28. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக. அ) அருந்து ஆ) தந்தனன்.
29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக. அ) தனியாழி ஆ) தலைக்கோல்
30. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?

## பகுதி – III

### பிரிவு–1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக** 2x4=8

31. 'செம்பரிதிமலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்'– தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக
32. இராமன், தன் இனிய உயிர் நண்பனிடம் கூறுவன யாவை?
33. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?
34. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக தமிழ்நதி கூறுகிறார்

### பிரிவு–2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக** 2x4=8

35. 2017ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டம் குறிப்பிடுவனவற்றை எழுதுக.
36. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் விளக்கம் எழுதுக.
37. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.
38. மயிலை சீனி வேங்கடசாமியின் படைப்புகள் குறித்து எழுது.

### பிரிவு–3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக** 3x4=12

39. சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும்
ஏமப் புணையைச் சுடும் – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக. (அல்லது)
செவியறிவுறூஉ துறையைச் சான்றுடன் விளக்குக.
40. இலக்கிய நயம் பாராட்டுக.
(மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

பூமிச்சருகாம் பாலையை
முத்து பூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே– கோடிப்
புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை – செலுத்தி
இரவலரோடு பேசுவேன்–!
இரவொளிக்கும் பரிதியை – ஏழை
விளக்கெரிக்க வீசுவேன்
– நா. காமராசன்

41. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக
அ) ஊழி பெயரினும் தாம் பெயரார் (அல்லது) ஆ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை
42. தமிழாக்கம் தருக
1. Learning is a treasure that will Follow its owner everywhere
2. A new language is a new life
3. Knowledge of language is the doorway to wisdom
4. The limits of my language are the limits of my world.
43. மழை அல்லது நட்பு என்னும் தலைப்பில் 8 வரிகளுக்கு மிகாமல் மரபுக் கவிதை / புதுக்கவிதை எழுதுக.

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 3x6=18

44. அ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க (அல்லது)
ஆ) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவம் வழிநின்று நிறுவுக.
45. அ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச் சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடலைத் தொகுத்து எழுதுக. (அல்லது)
ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.
46. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.
(அல்லது) மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.
47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக. 4+2=6
அ) 'காய்நெல் அறுத்து' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
ஆ) 'அரண்' என முடியும் குறளை அடிபிறழால் எழுதுக.